பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 15 ஞாயிற்றுக்கிழமை 31.12.2023 அதிர்வு 153

## காய்ச்சலால் மற்றுமொரு சிறைக் கைதி உயிரிழப்பு

மாத்தறை சிறைச்சாலையில் மேலும் ஒரு கைதி உயிரிழந்துள்ளார் என்று சிறைச்சாலையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக மாத்தறை 04

# தந்தை தற்கொலை செய்து 3 நாள்களின் பின் தாயும், மூன்று பிள்ளைகளும் நஞ்சருந்தி சாவு

## வருட இறுதியில் கொழும்பில் சோகம்

கொழும்பின் புறநகர் பகுதியான மாலம்பே – கஹந்தோட்டையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரின் சடலங்கள் இன்று அதிகாலை வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

35 வயதுடைய தாய், 9 மற்றும் 7 வயதுகளுடைய இரு மகன்மார் மற்றும் 6 வயதுடைய மகள் ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் நஞ்சருந்தி உயிர்மாய்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 04



# மொட்டுக் கட்சியை ஒதுக்கிவிட்டு ரணிலால் ஆட்டம் போட முடியாது!

## பொங்கியெழுகின்றார் நாமல்





(சுடர் திலீபன்)

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியே தற்போதும் ஆட்சியில் இருக்கின்றது. எமது பொதுஜன பெரமுனவே ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தது. எனவே, எமது கட்சியை ஒதுக்கிவிட்டு அல்லது எமது கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதி செயற்பட முடியாது.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். 04

# அதிகாலை தேடுதல் நடத்தச் சென்ற பொலிஸ் அதிகாரி சுட்டுக் கொலை!

## மேலும் ஒருவர் படுகாயம்; மாத்தறையில் பயங்கரம்

மாத்தறை, வெலிகம – பெலன பகுதியில் இன்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு – தேடுதல் நடவடிக்கையில் போது பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் பலியாகியுள்ளார். 04



# பிரதித் தலைவர் விவகாரத்தால் சஜித் - டலஸ் கூட்டணி சிக்கலில்





2024 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை மையப்படுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்குக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூட்டணியை அமைப்பதற்கான அங்கீகாரத்தைக் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவில் மீண்டும் கோரியிருந்தார்.

இதற்கு முழுமையான அங்கீகாரம் மத்திய செயற்குழு வழங்கியிருந்த போதிலும் சில நபர்களை இணைத்துக்கொள்வதில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

மறுபுறம் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சென்று சுயாதீனமாகச் செயற்படும் டலஸ் அழகப்பெரும, ஜீ.எல்.பீரிஸ், விமல் வீரவன்ச, சரித்த ஹேரத் மற்றும் உதய கம்மன்பில உள்ளிட்ட 13 பேர் கொண்ட குழுவுடன் கூட்டணி குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடி வருகின்றது.

இந்தக் கலந்துரையாடல்களின் போது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை மையப்படுத்தி அமைக்கப்படுகின்ற ஐக்கிய மக்கள் சக்தியை தலைமைத்துவமாகக் கொண்ட கூட்டணியின் பிரதித் தலைவர் பதவி டலஸ் அழகப்பெருமவுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவோ, அக்கட்சியின் ஏனைய சிரேஷ்ட தலைவர்களோ விரும்பவில்லை.

கூட்டணியில் பிரதித் தலைவர் பதவியைக் கோரி முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் நெருக்கடிகளைச் சந்தித்திருந்த நிலையில், தேசிய அமைப்பாளர் பதவியை டலஸ் அழகப்பெருமவுக்கு வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி விருப்பம் தெரிவித்துள்ளது.

எனினும், இதனை டலஸ் அழகப்பெரும விரும்பாத நிலையில் கலந்துரையாடல்களில் பங்கேற்காமல் உள்ளார். ஆனால், பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் தொடர்ந்தும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கோர விபத்தில் கணவன் சாவு; மனைவி படுகாயம்!

**(அனுராதபுரம் நிருபர்)**

வாகன விபத்தில் கணவன் உயிரிழந்துள்ளதுடன் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

இந்தக் கோரச் சம்பவம் அனுராதபுரம், கெக்கிராவை பிரதேசத்தில் நேற்று (30) இரவு 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பாரவூர்தி ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது காரைச் செலுத்திச் சென்ற கெப்பிட்டிக்கொல்லாவை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். காரின் முன் ஆசனத்தில் அமர்ந்து சென்ற அவரின் மனைவி (வயது 29) படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த இளம் தம்பதிக்கு 2 வயதில் ஆண் குழந்தை ஒன்று உள்ளது என்றும், மேற்படி குழந்தை இவர்களுடன் காரில் பயணிக்கவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

விபத்துடன் சம்பந்தப்பட்ட பாரவூர்தியின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் 64 வயதுடைய முன்னாள் இராணுவச் சிப்பாய் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் தன் பக்கம் வளைத்துப்போட தம்மிக்க அதிரடி வியூகம்



ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் களமிறக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா, தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுடனும் பேச்சுகளை ஆரம்பித்துள்ளார் என்று தெரியவருகின்றது.

இரண்டு தமிழ்க் கட்சிகள் மற்றும் முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவர்களுடன் இதுவரை பேச்சு நடத்தப்பட்டுள்ளது என்று தம்மிக்க பெரேரா தரப்பு தெரிவிக்கின்றது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு வழங்குமாறு சிறு கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுடனும் தம்மிக்க பெரேரா பேச்சுகளை நடத்தி வருகின்றார்.

மலையகத்தை மையமாகக் கொண்டு இயங்கும் சிறு கட்சிகளுடனும் தம்மிக்க பெரேரா பேச்சு நடத்தவுள்ளார் என்று தெரியவருகின்றது. அதேபோல் மலையகத்தில் உள்ள பிரதான கட்சிகளையும் சந்தித்து அவர் பேச்சு நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# புத்தூர் கிழக்கில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்!

## மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் வெறியாட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் - புத்தூர் கிழக்குப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில் வீட்டிலுள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளை மோட்டார் சைக்கிள் வந்த இனந் தெரியாதோர் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டில் உள்ளவர்கள் வெளியே வந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்து தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் வீட்டின் முன் பகுதி சேதம் அடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





# ரணிலின் ஆட்டம் ஆரம்பம்

## கடுப்பில் மொட்டுக் கட்சி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள சிறு கட்சிகளை வளைத்துப் போடுவதற்கான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார் என்று தெரிய வருகின்றது.

இதற்கான பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பித்திருந்தாலும், ஜனவரி மாதம் சிறு கட்சிகளுடன் ஜனாதிபதி நேரில் பேச்சு நடத்தவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கவுள்ளதாகவும், அதற்கு ஆதரவு வழங்குமாறும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிடம் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதியின் கோரிக்கையை ஏற்காது, தமது கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவதற்கான ஏற்பாடுகளை மொட்டுக் கட்சி செய்து வரும் சூழ்நிலையிலேயே மொட்டுக் கூட்டணியில் உள்ள சிறு கட்சிகளை வளைத்துப் போடுவதற்கான வியூகத்தை ஜனாதிபதி அமைத்துள்ளார்.

அத்துடன், மலையகத்தில் உள்ள சிறு கட்சிகளுடனும் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார்.

### பால் தேநீர், கொத்து உள்ளிட்ட

# உணவுப் பொருள்களின் விலைகள் நாளை முதல் அதிரடியாக அதிகரிப்பு



பால் தேநீர், கொத்து உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விலைகள் நாளை (ஜனவரி 1) முதல் அதிகரிக்கப்படுகின்றன என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதன்படி, பால் தேநீர் ஒன்றின் விலை 10 ரூபாவால் நாளை முதல் அதிகரிக்கப்படும் என்று சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷான் இன்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும், சாதாரண தேநீரின் விலை 5 ரூபாவாலும், சிற்றுண்டிகளின் விலை 10 ரூபாவாலும், சோறு மற்றும் கொத்து ரொட்டியின் விலை 25 ரூபாவாலும் அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் கூறினார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அதிகாலை தேடுதல்...

மேலும் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட்டே உயிரிழந்துள்ளார். உப பொலிஸ் பரிசோதகர் படுகாயம் அடைந்துள்ளார். இவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய பொலிஸ் குழுவொன்று இன்று அதிகாலை 2 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளது,

இதன்போது குழுவொன்று துப்பாக்கிப் பிரயோகமொன்றை மேற்கொண்டு வானொன்றில் தப்பிக்க முயற்சித்த தருணத்தில் பொலிஸார் பதில் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளனர்.

இதன்போது பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்ட நிலையிலேயே, பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தென் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் விசேட பொலிஸ் அதிகாரிகள் குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

### தந்தை தற்கொலை...

தந்தை கடந்த 28 ஆம் திகதி நஞ்சருந்தி உயிர்மாய்த்துள்ளார். இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன. நிதிப் பிரச்சினை காரணமாக அவர் உயிர்மாய்த்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், தந்தையின் உயிரிழப்பால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாகத் தாயும், மூன்று பிள்ளைகளும் சேர்ந்து நஞ்சு அருந்தி தாங்களும் உயிரை மாய்த்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தந்தையின் இறுதிக்கிரியை நடைபெற்ற மாலபேயில் உள்ள உறவினரின் வீட்டில் இருந்தே இவர்கள் நால்வரும் இன்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நால்வரினதும் சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### காய்ச்சலால்...

வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

53 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மொட்டுக்கட்சியை...

அவர் மேலும் கூறுகையில்,


"ஜனாதிபதி தான் நினைத்த மாதிரி செயற்பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமாக அமையும். எமது கட்சியின் ஆதரவை அவர் இழக்க நேரிடும். இந்த அரசை அவர் முன்கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்படும். ஒட்டுமொத்தத்தில் அவர் பழைய ரணில் விக்கிரமசிங்க ஆவார்.

இதை அவருக்கு நாம் புரியவைக்கத் தேவையில்லை. அவரே புரிந்துகொண்டு செயற்படுவார் என்று நம்புகின்றோம்.

என்னதான் இருந்தாலும் புதிய ஆண்டில் இரண்டு பிரதான தேர்தல்களை ஜனாதிபதி நடத்தியே ஆக வேண்டும். தேசிய தேர்தல்களைப் பிற்போட எமது கட்சி இடமளிக்கமாட்டாது.

நடைபெறவுள்ள இரண்டு பிரதான தேர்தல்களிலும் எமது பொதுஜன பெரமுன கட்சியே வெற்றிவாகை சூடும். ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் வேட்பாளர் யார் என்ற தீர்மானத்தை நாம் இன்னமும் எடுக்கவில்லை." – என்றார்.

# எழுத்தாளர் முருகபூபதிக்கு ஆஸ்திரேலியாவில் பாராட்டு!




பிரபல எழுத்தாளரும், ஊடகவியலாளருமான லெ.முருகபூபதிக்குக் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம், 2022 ஆம் ஆண்டுக்கான இயல் விருதையும், பிரான்ஸ் வென்மேரி அறக்கட்டளை இலக்கியச் சாதனையாளர் விருதையும் வழங்கிக் கௌரவித்துள்ளன.

இதனைத் தொடர்ந்து எழுத்தாளர் முருகபூபதியைப் பாராட்டும் விழா ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் ஏற்பாட்டில் மெல்பனில் ஜனவரி 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

112 High St, Berwick VIC - 3806, Australia என்ற முகவரியில் அமைந்துள்ள, மூத்த பிரஜைகள் மண்டபத்தில் இடம் பெறவுள்ள இந்த விழாவில், முருகபூபதியின் இலக்கியச் சாதனைகள், சமூகநலச் செயற்பாடுகள் தொடர்பில் அறிஞர்களும், இலக்கியவாதிகளும், சமூகச் செயற்பாட்டாளர்களும் உரையாற்றவுள்ளனர்.

சிறுகதை, நாவல், கட்டுரை, பயண இலக்கியம், சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம், நேர்காணல் பதிவுகள், புனைவு சாராத ஆக்கங்கள் முதலிய பல்துறைகளிலும் எழுதிவரும் அவரது படைப்புகள் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன.

எழுத்தாளர் முருகபூபதி, முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் வீரகேசரி பத்திரிகையில் பணியாற்றியவர். அவரது 'சுமையின் பங்காளிகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு நூலுக்கு 1976 ஆம் ஆண்டிலும், பறவைகள் என்ற நாவலுக்கு 2003 ஆம் ஆண்டிலும், இலங்கையில் தேசிய சாகித்திய விருதுகள் கிடைத்தன.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகள் எங்கும் வெளிவரும் பத்திரிகைகளிலும், இலக் கிய இதழ்களிலும் தொடர்ந்து எழுதிவரும் முருகபூபதி , 1987 ஆம் ஆண்டு முதல் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார்.

இலங்கையில் முன்னர் நீடித்திருந்த போரால் பெற்றோர்களை இழந்த மாணவர்களின் கல்விமேம்பாட்டுக்காக, கடந்த 35 வருடங்களாக உதவி வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான, இலங்கை மாணவர் கல்வி நிதியம் என்னும் அமைப்பின் நிறுவுனராக முருகபூபதி உள்ளார்.

ஆஸ்திரேலியாவில் 2001 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் எழுத்தாளர் விழாவை நடத்திவரும் ஆஸ்திரேலிய தமிழ் இலக்கியக் கலைச் சங்கத்தையும் ஆரம்பித்து அதிலும் தொடர்ந்து இயங்கி வருகிறார்.

இவ்வாறு தமிழ், இலக்கியம், கலை, சமூகம் சார்ந்த பணிகளில் தனது வாழ்நாள் முழுவதும் இடைவிடாது இயங்கிவரும் முருகபூபதிக்கு, கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும், பிரான்ஸ் வென்மேரி அறக்கட்டளையும் விருதுகளை வழங்கிக் கௌரவித்துள்ளன. இதற்காக இந்தப் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# திருமலை மாபிள் பீச் கடலில் நீராடச் சென்றவர் மாயம்!

**(அப்துல்சலாம் யாசீம் )**

திருகோணமலை மாபிள் பீச் கடற்கரையில் நீராடச் சென்ற நான்கு பேரில் ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில் அடித்துச்செல்லப்பட்டுள்ளார். அவரை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் பகுதியிலிருந்து திருகோணமலைக்கு பஸ் ஒன்றில் 23 பேர் கொண்ட குழுவினர் சுற்றுலா வந்துள்ளனர்.

நேற்று முன்தின் (29) மாலை மாபிள் பீச் கடற்கரையில் குளித்துக் கொண்டிருக்கும் போது நான்கு பேரில் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளவர் குருநாகல் மாவதகம இங்குருவத்த பகுதியைச் சேர்ந்த சுதர்சன பிரபோத் சுபசிங்க (18 வயது) எனவும் தெரியவருகின்றது.

காணாமல் போன இளைஞரை தேடும் பணியில் கடற்படையினரும் மீனவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

நீரில் மூழ்கிய சம்பவம் தொடர்பில் சீனக்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நம்பிக்கை தராத புத்தாண்டு

நாளை விடிந்தால் புது வருடம்.

இன்றோடு கழியும் பழைய வருடமும் மீட்சி தரவில்லை. நாளை வரப்போகும் புதுவருடமும் மீட்சி தரும் என்ற நம்பிக்கையும் இல்லை.

இதுதான் நாட்டின் சாதாரண பொதுமகனின் மன உணர்வு. மன உளைச்சல்.

நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்பது என்ற காரணத்துடன் நாளை பிறக்கும் புது வருடத்தில் அரசு விதித்துள்ள புதிய கெடுபிடி வரிகளினால் தங்கள் சராசரி வாழ்க்கை மேலும் மோசமாகப் பாதிக்கப்பட போகின்றது என்ற பேரச்சத்துடன்தான் நாளை பிறக்கும் புது வருடத்தை நாட்டின் சாதாரண மக்கள் எதிர்கொள்கின்றனர்.

அரசு விதித்துள்ள பெறுமதி சேர்(வற்) வரி உயர்வு எல்லாவற்றிலும் - எல்லாத் துறைகளிலும் - நெருக்கடிகளைத் தரப்போகின்றது என்பதுதான் பெரும்பாலானோரின் அச்ச உணர்வுக்குக் காரணம். ஆனால் அரசுத் தரப்பில் வேறு விதமாகக் கருத்துக் கூறப்படுகின்றது.

பெறுமதி சேர் வரி உள்வாங்கப்பட்டுள்ள பொருள்கள் மற்றும் சேவைகளின் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி, உரிய வரி மாற்றங்களைச் செய்து, வற் திருத்தத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது என நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்துள்ளார்.

''ஏராளமான வரி விலக்குகளை நீக்க புதிய திருத்தத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை உண்மைதான். அரசாங்கம் இழந்த பெரும் வருமானத்தை மீட்பதே இதன் நோக்கமாகும். ஆனால் சிலர் இந்த நடவடிக்கை குறித்து தவறான கருத்துக்களைச் சமூகமயமாக்கி வருகின்றனர். ஜனவரி முதலாம் திகதி முதல் வாழ்வது கடினம் என்றும், வரித் திருத்தத்தால் ஒரு குடும்பம் பெரும் செலவைச் சுமக்க நேரிடும் என்றும் சிலர் கூறுகின்றனர். வரித் திருத்தம் காரணமாக சில மேலதிக செலவுகள் ஏற்படும் என்றாலும், சிலர் கூறும் அளவுக்கு அது அதிகமானதாக இருக்க மாட்டாது என்பதையும் தெரிவிக்க வேண்டும். மேலும், பெறுமதி சேர் வரி உள்வாங்கப்பட்டுள்ள பொருள்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி, உரிய வரித் திருத்தங்களை செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே எடுத்து வருகிறது.'' - என்று சமாளிக்கின்றார் அவர்.

ஆனால் களநிலைமை அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே நாளை முதலாம் திகதியுடன் இந்த வற் வரி அதிகரிப்புக் காரணமாக நீர்க் கட்டணம் மூன்று சதவீதத்தினால் அதிகரிக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் கட்டணங்களை அதிகரிக்கும் திட்டம் ஆராயப்படுகின்றது.

எரிபொருள் விலை அதிகரிக்க, போக்குவரத்துக் கட்டணங்கள் நிச்சயம் உயர்த்தப்படும் என்று தனியார் போக்குவரத்துச் சங்கங்கள், ஓட்டோ உரிமையாளர்கள் சங்கங்கள், பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து வாகன உரிமையாளர்களின் சங்கங்கள் போன்ற தரப்புகள் அறிவித்து விட்டன.

வற் வரி அதிகரிப்பால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள், ஏனைய சேவைகளின் கட்டணங்கள் நாளையுடன் அதிகரிக்கப் போகின்றன. அது நிச்சயமானது.

இதற்கு முந்திய மாதங்களில் வீழ்ச்சி கண்டு வந்த பணவீக்கம் கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக மீண்டும் அதிகரிக்கத் தொடங்கி விட்டது. நாளை அறிமுகமாகும் புதிய வரி விதிப்புகளுடன் அதுவும் உயரும். அது உயர பொருள்களின் விலைகளும், வாழ்க்கைச் செலவும் தன் பாட்டில் எகிறும்.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளால் நாட்டில் அறுபது வீதமான மக்களின் வருமானம் பெருவீழ்ச்சி கண்டிருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. 22 வீதமான மக்கள் கடன் சுமையில் அல்லாடுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நாளையுடன் நடைமுறைக்கு வரும் புதிய வரிவிதிப்புக்கள், வரி உயர்வுகள் நாட்டின் சராசரிப் பொதுமகனை உரித்தெடுக்கப் போகின்றன - வறுத்தெடுக்க போகின்றன - என்பது நிச்சயம்.

பேரச்சத்துடன்தான் புத்தாண்டை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர் நாட்டு மக்கள்.

# பாரிய மரம் வேரோடு சாய்ந்ததால் இரு பெண்கள் காயமடைந்தனர்

**(மஸ்கெலியா நிருபர்)**

பாரிய மரம் ஒன்று வேரோடு சாய்ந்த தால் இரு பெண்கள் கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட நோர்வூட் பொலிஸ் பிரிவில் உள்ள டிக்கோயா, இன்ஜஸ்டி பீரட் தோட்டப் பிரிவில் 03 ஆம் இலக்க தேயிலை தோட்டத்தில், கொழுந்து பறித்துக் கொண்டிருந்த இரு பெண் தோட்ட தொழிலாளர்கள் மீது பாரிய மரமொன்று வேருடன் சரிந்து விழுந்துள்ளது.

இதனால் காயமடைந்த இரண்டு பெண் தோட்ட தொழிலாளர்கள் டிக்கோயா, கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிகப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

நோர்வூட் பகுதியில் இருந்து டிக்கோயா இன்ஜஸ்டி பீரட் தோட்ட பகுதிக்கு தொழிலுக்கு 15 தொழிலாளர்கள் வருகை தந்து தொழில் ஈடுபட்டு கொண்டிருந்த போதே மரம் அடியோடு சாய்ந்துள்ளது. அந்தப் பகுதியில் கடும் காற்றுடனான காலநிலை நிலவுகின்றது.

காயங்களுக்கு உள்ளான இரண்டு பெண் தொழிலாளர்களும் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.




# மன்னாரில் டெங்கு பரவல் உச்சம்; டிசெம்பர் மட்டும் 88 நோயாளர்கள்!

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வினோதன் தகவல்

**(மன்னார் நிருபர்)**

மன்னாரில் கழிவகற்றல் செயன் முறை ஸ்தம்பிதம் அடைந்துள்ளநிலையில் மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது. இந்த நிலையில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ளது.

எனவே பொதுமக்கள் அவதானமாக செயல்படுவதுடன் காய்ச்சல் காணப் படும் பட்சத்தில் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவிக்கையிலேயே இவர் இவ் வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

நாடளாவிய ரீதியில் தற்போது டெங்குத் தாக்கம் அதிகரித்துள்ளது. முழு இலங்கையும் எடுத்துக் கொண்டால் 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கடந்த ஜனவரி முதல் நவம்பர் வரை 111 டெங்கு நோயாளர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை டிசெம்பர் மாதத்தில் மட்டும் இதுவரையில் 88 நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்த நோயாளர்களில் பலர் கொழும்பு கண்டி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளில் இருந்து அல்லது அந்தப் பகுதிகளுக்கு சென்று வந்தவர்களாக உள்ளனர்.

ஆகவே இவர்கள் இந்த டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் இங்கு வரும்போது அவர்களை கடிக்கும் நுளம்புகள் தொற்றுதல் அடைந்து உள்ளூரிலும் இந்த நோய் வேகமாக பரவி வருகிறது.

குறிப்பாக விடத்தல் தீவு மற்றும் மன் னார் நகரத்தின் சில பகுதிகளிலும் பேசாலை பகுதிகளிலும் அதிகளவான டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்குநோயைப்பொறுத்தவரையில் சாதாரண டெங்கு காய்ச்சல், குருதிப் பெருக்குடனான டெங்கு காய்ச்சல் என்று இருவகையான டெங்கு காய்ச்சல் கள் உள்ளன. டெங்கு காய்ச்சலில் இந்த காய்ச்சல் ஒரு நோயாளருக்கு உருவாக போகிறது என்பது நோயாளியின் உடலில் உள்ள நீர்பீடன தன்மை அதே போல் டெங்கு வைரஸ் பிற பொருள்கள் ஆன்டிஜன் எனப்படும் பிற பொருள்கள் மற்றும் ஏனைய நீர்பீட காரணிகள் தீர்மானிக் கின்றது.

எது எவ்வாறாக இருக்கின்ற போதும் டெங்கு காய்ச்சலதும், குருதிப் பெருக்குட னான காய்ச்சலதும் ஆரம்ப அறிகுறிக ளாக நெற்றிப் பொட்டை அண்டிய தலையிடி, கண்ணின் பின்புறம் நோ, சிலருக்கு தொண்டை நோ, தசை நோ சிலருக்கு வயிற்றில் நோ போன்ற குணங்குறிகள் காணப்படும்.

டெங்கு குருதிப் பெருக்குடனான காய்ச்சலாக மாற்றமடையும் சந்தர்ப்பத் தில் அவர்கள் அதிக களைப்படைந்தவர் களாக உடல் பகுதி குளிர்ந்து காணப்ப டுவர். வலது பக்க வயிற்றின் மேல் பகுதி நோவும் காணப்படும். இந்த நிலையில் அபாயகரமான கட்டத்தை அடைவர்.

இரத்தக் கசிவு என்பது எமது குருதி நாடிகளில் இருந்து பிரிந்து செல் லும்குருதி மைத்துளை குழாய்களூடாக அதிகளமான நீர்பாயம் கலங்களுக்கும் குருதி மைத்துளைகளுக்கும் இடையில் வெளியேறுவதால் ஏற்படுகிறது .

இந்த கசிவு நிலை ஏற்படுகின்ற போது உடலில் அதிர்ச்சி நிலை ஏற்ப டும். இந்த அதிர்ச்சி நிலைமை காரண மாக உடலினுடைய குருதி அமுக்கம் குறையும், மூளை இருதயம் போன்றவற் றுக்கு செல்லும் குருதியின் அளவு குறையும் இது சிலவேளை மரணத்தை ஏற்படுத்தும்.

அதே நேரம் இவ்வாறு வெளியே செல்லும் நீர்பாயம் மீண்டும் உள் வருவதற்கான தன்மை காணப்படுகின்ற போது அந்த அலர்ஜி காரணமாக அதிகமாக வெளியேறிய குருதி மயிர்த் துளை குழாகளினுடைய துவாரங்கள் மூடுவதன் காரணமாக வெளியேறி திரவம் சில சந்தர்பங்களில் மீண்டும் உள்ளே வர முடியாத நிலை ஏற்படும்.

அவ்வாறு ஏற்படும் போது அவர்கள் இதயம் சுற்றும் மென்சவ் அலர்ஜி சுவாசப்பை அலர்ஜி மற்றும் மூளை வீக்கம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு மரணம் அடைய கூடிய சாத்தியம் இருக்கின்றது.

ஆகவே இந்த டெங்கு குருதி பெருக்குடன் காய்ச்சல் நோயாளிகள் கட்டாயமாக வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டும்.

அவர்களுடைய குருதியின் சிறு தட்டுக்கள் எண்ணிக்கை குறைவடையும். ஆனால் குருதி சிறு தட்டுக்களுடைய எண்ணிக்கை ஒரு லட்சத்தையும் விட குறைவடைவதற்கு முன்பதாக சிலருக்கு கசிவு நிலை ஏற்படலாம்.

ஆகவே சில குணங்குறிவுகளை அடிப்படையாகக் கொண்டு உடலில் அதிகளவு களைப்பு, வயிற்றில் நோ, தொடர்ந்து சத்தி போன்ற இப்படியான குணங்குறிகள் இருப்பின் அவர்கள் கட்டாயம் வைத்தியசாலையில் தங்கி இருந்து சிகிச்சை பெற வேண்டும் .

அவர்களுக்கு வழங்கப்படும் திரவமானது அவர்களுடைய உடலுக் குத் தேவையான சரியான அளவில் கொடுக்கப்பட வேண்டும். குறைவாகவும் வழங் கக் கூடாது. அது வைத்திய சாலையில் தான் சரியான முறையில் அளவிட்டு தீர்மானிப்பார்கள். ஆகவே அவர்கள் வைத்தியசாலையில் தங்கியி ருந்து சிகிச்சை பெறுவது கட்டாய மாகும்.–என்றார்.

# இளகிய மனம் கொண்ட கப்டன் விஜயகாந்த்; அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும்!

## கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் இரங்கல்

தமிழ் மக்கள் செறிந்து வாழும் அனைவருக்கும் இளகிய மனதோடு உதவிகளை வாரி வழங்கிய தேசிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் நடிகருமான விஜயகாந்த்தின் ஆத்மா சாந்தியடை வேண்டும்.

கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் உடல்நலம் காரணமாக உயிரிழந்த செய்தியானது இந்தியாவில் மாத்திரமல்ல உலக நாடுகளில் உள்ள தமிழ் மக்களையும் வேதனை அடையச் செய்துள்ளது. அனைத்து நாடுகளிலும்



உள்ள மக்கள் இன்று நடிகர் விஜயகாந்தின் மறைவை ஒட்டி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமின்றி சகல மக்களுக்கும் சமத்துவத்தை பெற்றுக் கொடுப்பதில் முன்னிலையாக திகழ்ந்தவர் நடிகர் விஜயகாந்த் உணவில் பாகுபாடுயின்றி சகலருக்கும் சமைத்த உணவை வழங்கியவர்.

அவர் தமிழுக்கும் தமிழருக்கும் குரல் கொடுத்த ஒரு மாமனிதராவார். எழை பணக்காரர் இன்றி முழுத் தமிழ் மக்களும் இன்றும் கதறி அழுகின்றனர்.

இந்திய நாட்டின் பிரதமர் முதல் பலரின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ள நடிகர் விஜயகாந்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிறார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்துக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.- என்றுள்ளது.



# இறக்காமம் மகளிர் மகா சங்க புதிய நிர்வாக சபை தெரிவு!

(நூருல் ஹுதா உமர்)

கிராம மட்டத்தில் சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள், பெண்கள் எதிர்நோக்கும் துஷ்பிரயோகங்கள், அவர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் போன்றவற்றை கிராம மட்டத்தில் வலுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் உள்ள மகளிர் சங்கங்களை உயிரோட்டமுள்ளதாக செயற்திறன்மிக்க அமைப்புக்களாகப் புதுப்பிப்பித்து மீளுருவாக்கம் செய்யும் வேலைத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அந்தத் தொடரில், இறக்காமம் பிரதேச செயலகத்தை உள்ளடக்கிய பிரதேச மட்ட மகளிர் மகா சங்கத்துக்கான புதிய நிர்வாக சபை தெரிவு மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (பதில்) எம்.எம்.கே. சாஜிதாவின் ஒருங்கிணைப்பில் இறக்காமம் பிரதேச செயலர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

நிர்வாக சபை தலைவியாக எஸ். நஜீமியா, செயலாளராக ஏ.கே. ஜாயிஸா, பொருளாராக ஐ. பாஹிமா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களும் சபையில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

எதிர்வரும் காலங்களில் பெண்கள் தொடர்பான அனைத்து விடயங்கள் மற்றும் வேலைத் திட்டங்கள், வாழ்வாதார உதவிகள், நல நோன்புத் திட்டங்கள் அனைத்தும் இந்த மகளிர் மகா சங்கங்களின் ஊடாகவே நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ. பஸீனா, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் பி. யஷோதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் கப்டன் விஜயகாந்த் நினைவுகூரல்!

(பழுவூரான்)

மறைந்த நடிகரும், அரசியல்வாதியுமான புரட்சிக் கலைஞர் கப்டன் விஜயகாந்தை நினைவு கூரும் நிகழ்வு மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (30) இடம்பெற்றது.

மட்டக்களப்பு வாழ் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு மறைந்த நடிகரின் திருவுருவப் படத்துக்கு மலர்தூபி அஞ்சலி செலுத்தியதோடு, அகவணக்கமும் செலுத்தினர்.

மறைந்த நடிகரும், அரசியல்வாதியுமான புரட்சிக் கலைஞர் கப்டன் விஜயகாந்தின் இறுதிச்சடங்கு இந்தியாவின் தமிழ்நாட்டில் நடைபெற்றவேளை இவ் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.





# கட்டுரைப் போட்டி வெற்றியாளருக்கு திருகோணமலையில் பரிசில் வழங்கல்



(அப்துல்சலாம் யாசீம் )

சிறுதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டாக கட்டுரை போட்டியொன்று திருகோணமலை மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே சிறுதொழில் முயற்சி திணைக்களத்தால் நடத்தப்பட்டது. இப்போட்டியில் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர் பங்கு கொண்டனர்.

இவர்களில் வெற்றிபெற்ற மாணவருக்கு விருது வழங்கும் விழா வெள்ளிக்கிழமை (29) திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ஹெட்டியாராச்சி, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகொரல, திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்க தலைவர் எஸ். குகதாசன், மத்திய வங்கி கிழக்கு மாகாண முகாமையாளர் பிரபாகரன் மற்றும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# கந்தளாய்க் குளத்தினுடைய எட்டு வான் கதவுகள் திறப்பு!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை -கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்ததன் காரணமாக குளத்தின் எட்டு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இதனால் கந்தளாய் குளத்தின் கீழ் உள்ள நீரேந்து பிரதேசங்கள் தாழ் நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

அவ்வாறு நீரில் மூழ்யுள்ள பிரதேசங்களில் ஒன்றான கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உப்பாறு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள நான்கு கிராமங்களுக்கான தரைவழிப் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளன.

மயிலப்பன்சேனை, சோலைவெட்டுவான், தகர வெட்டுவான் முதலான கிராமங்களுக்கான தரைவழி போக்குவரத்து முற்றாக தடைபட்டுள்ளன.

தமது போக்குவரத்தை மக்கள் தோணிகள் மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் கிராம மக்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

# மன்னார் எருக்கலம்பிட்டியில் 75 வீடுகளுக்கும் மின்சாரம்!

## அரச நிதியை வழங்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அனுமதி

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டம் எருக்கலம்பிட்டியில் அமைக்கப்பட்ட முஸ்லிம்களுக்கான 75 வீடுகளுக்கும் மின்சாரத்தைப் பெறுவதற்கு அரச நிதியை வழங்க மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தனியார் அமைப்பு மேற்கொண்ட வீட்டுத் திட்டத்துக்குத் அரச நிதியில் மின் இணைப்பை பெற்று வழங்குவதற்காகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் ஓர் தனியார் அமைப்பால் 75 குடும்பங்களுக்குக் குவைத் நகர வீட்டுத் திட்டம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அமைத்த வீடுகளின் நில உரிமை இன்றுவரை நிறுவனத்தின் பெயரிலேயே உள்ளது.

இவ்வாறு காணப்படும் வீடுகளுக்கான மின் இணைப்பை பெற தனியான உரித்து ஆவணங்கள் அல்லது மாவட்டச் செயலகத்தின் ஒப்புதலை நகர அபிவிருத்தி மீள்குடியேற்ற அமைச்சு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கோரியது.

இந்த நிலையில 75 குடும்பங்களுக்கும் தனியான ஆவணங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம் பெறுகின்றன. இருந்தபோதும் மீள்குடியேற்ற அமைச்சின நிதியில் மின் இணைப்பைப் பெறுவதற்குத் தனியான ஆவணம் கோரப்படுவதால் இதற்கான ஒப்பதலை வழங்குமாறு கோரி நிலத்தின் உரித்தான தனியார் அமைப்பு விண்ணப்பித்துள்ளது.

நிலத்தின் உரித்தான அமைப்பு கடிதம் எழுதி 5 மாதங்கள் கடந்தும் தனியாரின் பெயரில் நிலத்தை உரிமை மாற்றம் செய்யாது இந்த நிதியை விடுவிப்பதற்காக நேற்று முன்தினம் (29) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியை பெறுவதற்காக ஒருங்கிணைப்புக் குழுவின் நிகழ்ச்சி நிரலுக்குள் இணைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

75 குடும்பங்களுக்கு எனத் தெரிவிக்கப்பட்டபோதும் ஒரு மத அமைப்பின் பெயரிலேயே நில உரித்து இன்றுவரை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட நீதிபதிக்குப் பிரியாவிடை





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

அம்பாறை மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.டி.சந்தன இடமாற்றலாகி செல்வதையொட்டி அம்பாறை மாவட்ட நீதிவான் நீதிமன்ற உத்தியோஸ்தர்கள் ஒழுங்கு செய்திருந்த பிரியாவிடை நிகழ்வு அம்பாறையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எல்.கே.தர்ம கீர்த்தி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



# ‘மருதம்’ சிறுவர் கதைப்பாடல் வெளியீடு!

**(த.சுபேசன்)**

ஆசிரியரும் கவிஞருமான நந்தினியின் ‘மருதம்’ எனும் சிறுவர்களுக்கான கதைப்பாடல் நூல் வெளியீட்டு நிகழ்வு மிருசுவில் அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி வளர்மதி கபிரியேல்பிள்ளை தலைமையில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் மற்றும் தென்மராட்சி கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி. இராசலட்சுமி மயில்வாகனசிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சாவகச்சேரி முன்பள்ளிகளின் கோட்ட இணைப்பாளர் திருமதி. செந்தூரன் ஆனந்தியும் கலந்து கொண்டனர்.

நூலின் முதற்பிரதியை தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுவேலிக் கிளை நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் திருமதிஅம்பிகா ஆதவன் பெற்றுக் கொண்டார். இந்த நூலின் நயப்புரையை அதிபர் ந.சர்வேஸ்வரன் நிகழ்த்தினார்.







# கல்முனை மாநகர சபையின் விருது விழா!

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான விருது விழா வியாழக்கிழமை (28) சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாநகர சபையின் 16 துறைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அதிசிறந்த உத்தியோகத்தர்கள் 16 பேர் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

வேலைத் தொழிலாளியான ஆர்.இன்பராஜா என்பவர், கல்முனை மாநகர சபையின் இந்த ஆண்டுக்கான அதிசிறந்த ஊழியராக தெரிவு செய்யப்பட்டு, விஷேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும் ஒவ்வொரு துறையிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூவர் நற்சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கல்முனை மாநகர சபையின் முதலாவது ஆணையாளராக கடமையாற்றி, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகவும் இறுதியாக கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளராகவும் பணியாற்றி, நிர்வாக சேவையில் இருந்து ஓய்வுபெற்ற எம். வை. சலீம் இந்நிகழ்வுக்கு விசேட விருந்தினராக அழைக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

மேலும், கல்முனை மாநகர சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பொறியியலாளர் என்.சர்வானந்தன் உட்பட 31 பேர் இந்த நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

மாநகர சபையின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற திண்மக் கழிவகற்றல் சேவையில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி வருகின்ற சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் வேலைத் தொழிலாளர்களுக்கு இதன்போது பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் கல்முனை மாநகர சபையை பொறுபேற்று குறுகிய காலத்தினுள் நிர்வாக சீர்திருத்தங்களை மேற்கொண்டு, மாநகர சபையை வினைத்திறன் மிக்க நிறுவனமாக மாற்றியமைத்து, உன்னத சேவையாற்றி வருகின்ற மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, மாநகர சமூகத்தின் சார்பில் முன்னாள் மாநகர ஆணையாளரும் முன்னாள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருமான எம்.வை. சலீமால் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.















# கல்முனை முன்னாள் பிரதி முதல்வர் பாகிஸ்தான் தூதரைச் சந்தித்துப் பேச்சு

**(அஸ்ஹர் ஆதம்)**

பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான தூதர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறூக் புர்கியின் பதவிக்காலம் நிறைவடைந்து பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளார்.

இந்த நிலையில் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்குக் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபருமான ரஹ்மத் மன்சூர் நேரில் சென்று சந்தித்து தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

தமது பவுண்டேசனுக்கு உறுதுணையாக இருந்து பல விடயங்களில் ஒருங்கிணைப்புச் செய்த தூதுவருக்குக் கல்முனை மக்கள் சார்பிலும், ரஹ்மத் பவுண்டேசன் சார்பிலும் நினைவுச் சின்னம் ஒன்று வழங்கப்பட்டது.





# திருக்கோவிலில் இலக்கிய போட்டி வெற்றியாளர்களுக்கு பரிசளிப்பு

**(வி.ரி.சகாதேவராஜா)**

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகம் நடத்திய இலக்கிய போட்டியில் திறந்த பிரிவு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.நிரோஜினி தவநீதன் ஒருங்கமைப்பில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் வெள்ளிக்கிழமை (29) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் மற்றும் இலக்கிய போட்டியில் வெற்றி பெற்ற வெற்றியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.







# வன வள, வன ஜீவராசி திணைக்கள காணிகள் காணி இல்லாதவர்களுக்கு!

## மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஆராய்வு

(மன்னார் நிருபர்)

காணி இல்லாதவர்களுக்கு வன வளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களிடம் இருந்து காணிகளை விடுவித்து பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான இறுதி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட அரச அதிபர் கே. கனகேஸ்வரன் ஏற்பாட்டில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம், கே.திலீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இணைத் தலைவர்களில் ஒருவரான வடமாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

இந்தக் கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அங்கு மேலும் கதைக்கப்பட்ட விடயங்களாவன,

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி கோபுரம் அமைத்து வருகின்றமை மற்றும் சட்ட விரோதமாக காணிகள் அபகரிப்பு, சட்ட விரோத மரம் வெட்டபடுகின்றமை குறித்தும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

மேலும் நானாட்டான் பிரதேச கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரவை தொடர்பாக ஆராயப்பட்டது.

நானாட்டான் புல்லறுத்தான் கண்டல் பிரதேசத்தில் ஒதுக்கப்பட்ட காணியில் பயிர்ச்செய்கை செய்து வருபவர்களை உடனடியாக வெளியேற்றி அக்காணிகளை மேய்ச்சல் தரவைக்கு கையளிக்க உரிய அதிகாரிகளுக்கு வடமாகாண ஆளுநர் ஏற்கனவே பணித்திருந்தார்.

எனினும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போது குறித்த காணி சரணாலயமாக பிரகடனப் படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் குறித்த பிரதேசம் தொடர்பாக சகல ஆவணங்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வனவள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணி இல்லாதவர்களுக்கு வன வளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களங்களிடம் இருந்து காணிகளை விடுவித்து பகிர்ந்தளித்தல் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன் போது விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பான விபரங்கள் தேசிய ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வர்த்தமானி அறிவித்தல் வெளியானவுடன் ஏனைய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஷ்ட ஈடு குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற அமைப்புகள், இராணுவம், பொலிஸ், கடற்படை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.





# சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடல்

(எம். எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்று கூடல் அண்மையில் அதன் தலைவர் எம். எல்.எம்.இஸ்மாயில் தலைமையில் அக்கரைப்பற்று 'ஓரியன்ற்' வில்லாவில் நடைபெற்றது.

நிகழ்வில் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன் ஒன்றிய உறுப்பினர்களின் பிள்ளைகளும் கௌரவிக்கப்பட்ட னர்.



# வெள்ளத்தில் மூழ்கியுள்ளன கிண்ணியா உப்பாறு கிராமங்கள்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள உப்பாறு கிராம சேவகர் பிரிவில் காணப்படும் கிராமத்தின் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அதன் ஊடான தரைவழிப் போக்கு வரத்துத் தடைப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு(29) முதல் போக்கு வரத்துத் தடைப்பட்டு அந்தப் பகுதி மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட் டுள்ளது.

சோளவெட்டுவான், காரவெட்டுவான், தகரவெட்டுவான், மயிலப்பன் சேனை உள்ளிட்ட அதனை அண்டிய கிராமங் களுக்கு செல்லும் வீதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் மக்கள் வெள்ளத்தில் பயணம் செய்து வருகின்றனர். இவ் வீதியை தவிர மாற்று வீதி இன்மையால் மக்கள் வெள்ள நீரைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளது.

இந்த நிலையில் தமது அன்றாட இயல்பு நிலை பாதிக்கப்பட்டு தங்களின் ஜீவனோபாயமும் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர். இந்தப் பகுதியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருவதுடன் அவர்களின் வாழ்வாதாரமாக தோட்டச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.



# கிளிநொச்சி வைத்தியசாலையில் பெரும் ஆளணிப் பற்றாக்குறை!

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பல தரப்பிலும் கோரிக்கை

(பரந்தன் )




கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கான வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட ஆளணி வளங்களை நிரப்பு வதற்கு மத்திய மற்றும் மாகாண அரசு கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலை பல்வேறு ஆளணி நெருக்கடிக ளுக்கு மத்தியில் இயங்கி வருகிறது. சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் கதிரியக்க நிபுணர் இல்லாத நிலை காணப்படுகின்றது. ஏற்கனவே இருந்த கதிரியக்க நிபுணர் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்ற பின்னர் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இந்த வைத்தியசாலையில் கதிரியக்க நிபுணர்கள் எவரும் கடமை யில் இல்லை. இதனால் மேலதிக ஸ்கா னிங் பரிசோதனைகளுக்காகத் தினமும் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இவ்வாறான நோயாளர்கள் அதிக நாள்கள் விடுதிகளில் தங்க வேண்டியது டன் சிகிச்சை பெறுவதிலும் காலதாம தங்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் தற்கா லிகமாக இணைக்கப்பட்டுள்ள கதிரி யக்க நிபுணர் 2023 ஆம் ஆண்டு வருடாந்த மருத்துவ நிபுணர் இடமாற்றப் பட்டியலில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்கு நியமிக்கப்பட் டுள்ளார்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட கதிரியக்க நிபுணரை யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து விடுவிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் முன்வைக்கப்பட்டும் இதுவரை விடுவிக் கப்படவில்லை.

இவ்வாறு பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த வைத்திய சாலையில் 05 விசேட மருத்துவ நிபு ணர்கள், ஒரு கதிரியக்க நிபுணர், ஒரு விசேட மருத்துவ நிபுணர், ஒரு விசேட மருத்துவ நிபுணர், விசேட மருத்துவ நிபுணர், 42வரையான வைத்தியர்கள், 98 வரையான தாதிய உத்தியோகத்தர் கள், 06 வரையான மருந்தாளர், 02 ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், 02 கதிரியக்க படப்பிடிப்பாளர்கள், 13 வரையான குடும்பநல மருத்துவ மாதுக் கள், 01 முளையவியல் நிபுணர், 109 சுகாதார சேவை உதவியாளர்கள் உள் ளிட ஆளணி வெற்றிடங்கள் காணப் படுகின்றன.

இவ்வாறு காணப்படும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கான வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட ஆளணி வளங்களை நிரப்புவதற்கு மத்திய மற்றும் மாகாண அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வெள்ளத்தில் மூழ்கிய கிட்டங்கி வீதி!

(அபு அலா)



அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்துவரும் அடை மழை காரணமாக நாவிதன்வெளி பிர தேச செயலர் பிரிவிலுள்ள கல்லோயா குடியேற்ற கிராமங்களையும் கல்முனை நகரையும் இணைக்கும் கிட்டங்கி வீதி வெள்ளத்தில் மூழ்கியள்ளது.

இதனால் இந்த வீதியூடான போக்கு வரத்தில் ஈடுபடுவதில் பிரதேச மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

விவசாயிகள், அலுவலக உத்தியோ கத்தர்கள், பொது மக்கள் என ஆயிரக் கணக்கானவர்கள் நாளாந்தம் பய ணிக்கும் இந்த வீதியில் வெள்ள நீர் மட்டம் உயர்ந்து வருவதால் கல்லோயா குடியேற்ற கிராமங்களிலுள்ள சவ ளக்கடை அன்னமலை, சொறிக்கல் முனை, 4ஆம், 5ஆம், 6ஆம், 12ஆம் கொலனிகள், நாவிதன்வெளி போன்ற பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள மக்கள் வெள்ளத்துக்கு மத்தியில் தமது அன்றாட பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதிக்கான நிரந்தர பாலம் அமைக்குமாறு நீண்ட காலமாகப் பிரதேச மக்களால் விடுக்கப்படும் கோரிக்கையை இதுவரை எந்த அரசும் நிறைவேற்றவில்லை என்பது பெருங் குறையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பாறை மாவட்டத் தில் சில இடங்களில் பல நாள்களாகப் பெய்து வரும் மழையால் அதிகமான மழை நீர் ஓட்டமில்லாமல் வயல் பகுதி களில் தேங்கி நிற்கின்றது. இதனால் நெற்பயிர்கள் அழுகி அழிந்துபோகும் நிலையில் காணப்படுகிறது.

# மலையக தமிழர்களை இந்தியா மறக்கவில்லை

## பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா தெரிவிப்பு



இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு பிரதமர் மோடி துணை நிற்கிறார் என்று பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா தெரிவித்தார்.

இலங்கையில் இந்திய வம்சாவளி தமிழர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும், இந்திய வம்சாவளி தமிழர்கள் குடியேறி 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவுகூரும் வகையிலும் நினைவு அஞ்சல் தலை வெளியீடு நிகழ்ச்சி டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா தலைமை தாங்கினார். இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டைமான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மத்திய இணை அமைச்சர் எல். முருகன், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதா கிருஷ்ணன், இலங்கை தூதரக அதிகாரி பிரியங்கா விக்கிரமசிங்கே உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா, நினைவு அஞ்சல் தலையை வெளியிட, இலங்கை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து, இலங்கை தமிழர்களின் வாழ்வியல் தொடர்பான குறும் படம் திரையிடப்பட்டது.

இந்த நிகழ்வில் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா உரையாற்றுகையில்,

"நம் மூதாதையர்கள் பட்ட துன்பத்தை இந்த படக்காட்சிகள் காட்டியது மிகக் குறைவுதான். அந்த துயரத்தின் ஆழத்தை நான் உணர்கிறேன். தன் வாழ்வுரிமைக்காக நம் இந்திய வம்சாவளியினர் செய்த தியாகங்களை பெருமைப்படுத்தும் வகையில், அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது. 200 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைக்கு சென்ற இந்திய வம்சாவளி தமிழர்களை நினைவு கூர்வது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

ஆங்கிலேயர்கள், இலங்கையில் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடங்கிய பிறகு, தமிழர்களை அங்கு குடியேற ஊக்குவித்தனர். தங்களது தேயிலை தோட்டங்களிலும், வயல்களிலும் தமிழர்களை வேலை செய்ய பணித்தனர். அந்த தமிழர்களின் போராட்டம் மிகவும் வேதனையானது.

இலங்கைக்கு இடம்பெயர்வதால் ஏற்படும் அபாயங்களை அந்த மக்கள் ஒரு போதும் அறிந்திருக்கவில்லை. இலங்கையில் வாழும் நம் வம்சாவளியை இந்தியா மறக்கவில்லை. அவர்களுக்கு பிரதமர் மோடி துணையாக நிற்கிறார்." என்று தெரிவித்தார்.

# நிவாரண உதவி வழங்கும்போது நடிகர் டி.ராஜேந்தர் திடீர் மயக்கம்



வெள்ள நிவாரண உதவி வழங்குவதற்காக சென்ற நடிகர் டி.ராஜேந்தர் திடீரென மயக்கமடைந்துள்ளார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்காக தூத்துக்குடிக்கு நடிகரும், இயக்குநருமான டி.ராஜேந்தர் நேற்று சென்றுள்ளார்.

விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக் கும்போது, "முன்பு டி.ஆராக இருந்த நான், தற்போது இறையடியாராக மாறிவிட்டேன். பெரிய உதவி செய்யக் கூடிய அளவுக்கு நான் பெரிய ஆள் அல்ல.

இதில் அரசியல் சாயம் பூசிக் கொள்ளவும் இல்லை. அரசியலை மறந்து, வேறொரு வாழ்க்கை வாழ்கிறேன். எனது மகன் எஸ்.டி.ஆர். ரசிகர் மன்றம், டி.ஆர் மன்றம் சார்பில் இந்த உதவிகளை செய்து வருகிறோம்" என்றார்.

பின்னர் அவர் தூத்துக்குடி லெவிஞ்சிபுரம் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

அப்போது அவர் திடீரென மயக்கமடைந்தார். ரசிகர்கள் அவரை தாங்கிப் பிடித்து அருகில் இருந்த நாற்காலியில் அமரவைத்து, முகத்தில் தண்ணீர் தெளித்தனர். மயக்கம் தெளிந்த பின்னர் டி.ராஜேந்தர் அங்கிருந்து காரில் தூத்துக்குடிக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

# ஹமாஸ் சுரங்கப்பாதையை அழித்தது இஸ்ரேல்: கடந்த 24 மணி நேரத்தில் 200 பேர் உயிரிழப்பு



காசாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் கடந்த 24மணி நேரத்தில் 200 பேர் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசா முனையில் செயல்படும் ஹமாஸ், இஸ்லாமிக் ஜிகாத் போன்ற ஆயுதக்குழுக்கள் தீவிரவாத தாக்குதல் நடத்தின.

இந்த தாக்குதலில் இஸ்ரேலைச் சேர்ந்த 1,200 பேர் உயிரிழந்தனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 240 பேரை பணயக் கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்தி சென்றனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து காசாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக் குழுவினர் மீது இஸ்ரேல் போர் அறிவித்து தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது.

இதுவரை நடந்த இஸ்ரேல் ஹமாஸ் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலில்மட்டும் 1,200 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கு பதிலடியாக காசா முனையில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 20 ஆயிரத்து 424 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

காசா முனையில் தரைவழி தாக்குதலின்போது ஹமாஸ் ஆயுதக்குழுவுடன் நடந்த மோதலில் இதுவரை இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் 157 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளையில், பாலஸ்தீனத்தின் மேற்குகரையிலும் வன்முறை வெடித்துள்ளது. காசா மேற்கு கரையில் இதுவரை 303 பேர் உயிரிழந்துள்ளனர்

இந்த நிலையில், காசா முனையில் உள்ள பணயக் கைதிகளில் 100 இற்கும் மேற்பட்டோரை ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. ஆனாலும், இன்னும் 129 பேர் காசாவில் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

பணயக் கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் ஈடுபட்டு வருகிறது.

இந்தச் சூழலில் நேற்று முன்தினம் ஹமாஸ் அமைப்பினரின் சுரங்கப்பாதை வளாகத்தை இஸ்ரேல் படைகள் கடும் தாக்குதல் நடத்தி அழித்தன. மேலும் அங்கு நடந்த தாக்குதலில் கடந்த 24மணி நேரத்தில் 200 பேர் உயிரிழந்துள்ளனர் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

மத்திய காசா பகுதியிலுள்ள நுசரைத் கேம்ப் பகுதியில் தொடர்ந்து வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியதாக பாலஸ்தீன பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுரங்கப்பாதை வளாகத்தை அழித்ததன் மூலம் காசா பகுதியில் இஸ்ரேல் படைகள் முன்னேறியுள்ளன என தெரியவந்துள்ளது. இதுகுறித்து இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் யோவ் கேலண்ட் தெரிவிக்கையில்,

"இஸ்ரேல் படைகள், ஹமாஸின் சுரங்கப்பாதை வளாகத்தை கடும் தாக்குதல் நடத்தி அழித்துள்ளன.

மேலும் ஹமாஸ் அமைப்பினரின் கொமாண்ட் மையங்கள், ஆயுத வளாகங்கள் ஆகியவற்றை இஸ்ரேல் படைகள் முற்றுகையிட்டு கைப்பற்றியுள்ளன.

அதுமட்டுமல்லாமல் காசாவின் பெரும்பாலான பகுதிகளில் இஸ்ரேல் படைகள் முன்னேறியுள்ளன." என்று தெரிவித்தார்.

# பலுசிஸ்தானில் 3 தாக்குதல்கள்: பி.எல்.ஏ. அமைப்பு பொறுப்பேற்பு



பாகிஸ்தானின் தென்மேற்கில் அமைந்துள்ள பலுசிஸ்தானில் 3 தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் மிகப்பெரிய மாநிலம் பலுசிஸ்தான் ஆகும். இங்கு பலுசிஸ்தான் விடுதலை இராணுவம் (பி.எல்.ஏ) என்ற அமைப்பு பல ஆண்டுகளாக தனி நாடு கேட்டு போராடி வருகிறது.

இந்த நிலையில் பலுசிஸ்தானில் நோஷ்கி, துர்பத், புளேடா ஆகிய 3 இடங்களில் நடந்த தாக்குதல்களுக்கு பி.எல்.ஏ. பொறுப்பேற்றுள்ளது.

இதுகுறித்து பி.எல்.ஏ. செய்தித் தொடர்பாளர் ஜீயந்த் பலூச் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பி.எல்.ஏ. போராளிகள் ஸ்னைபர்கள் மற்றும் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி நோஷ்கியின் பால்கானி, கேஷங்கி பகுதியில் உள்ள பாகிஸ்தான் இராணுவ நிலைகளை குறிவைத்து தாக்குதல் நடத்தினர். இதில் சிப்பாய் ஒருவர் அதே இடத்தில் உயிரிழந்தார்.

கடந்த வியாழக்கிழமை, துர்பத் நகரின் ஆப்சிர் பகுதியிலும் டிசம்பர் 24 ஆம் திகதி மாலை புளேடாவில் உள்ள இராணுவ சோதனைச் சாவடி மீது கையெறி குண்டுகள் வீசி பி.எல்.ஏ. தாக்குதல் நடத்தியது. 2 சிப்பாய்கள் பலத்த காயம் அடைந்தனர்." என்றார்.